RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 324 | நவம்பர்.24 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## கோவை செம்மொழிப் பூங்காவை டிச.1 முதல் பார்வையிடலாம்

**கோவை, நவ.24–**

கோவையில் ரூ.214 கோடி மதிப்பீட்டில் 45 ஏக்கரில் அமைக்கப் பட்டுள்ள செம்மொழிப் பூங்காவை வரும் 25ம் தேதி முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளதாகவும், டிசம்பர் 1ம் தேதி முதல் பூங்காவை பொதுமக்கள் பார்வை யிடலாம் என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

கோவை காந்திபுரம் பகுதியில் ரூ.214 கோடி மதிப்பீட்டில் 45 ஏக்கரில் செம்மொழிப்பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு , முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி ஆகியோர் நேற்று பார்வை யிட்டனர்.

இதையடுத்து அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறியதாவது: கோவையில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப்பூங்காவை வரும் 25ம் தேதி காலை 11 மணிக்கு முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்ட பின், டிசம்பர் 1ம் தேதி முதல் செம்மொழிப் பூங்காவை பொதுமக்கள் பார்வை யிடலாம். பள்ளிக் குழந்தைகளுடன் முதல்வர் கலந்துரையாட உள்ளார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளை முதல்வர் பார்வையிட உள்ளார். கோவை நகரின் முக்கியப் பிரமுகர்களுடன் கலந்துரையாட உள்ளார்.

செம்மொழிப் பூங்காவில் மொத்தமுள்ள 45 ஏக்கர் பரப்பளவில் 7 ஏக்கர் மாநாட்டு மையம் போக, மீதமுள்ள பகுதியில் பசுமைப் பூங்கா அமைக்கப்படும். செம்மொழிப்பூங்காவை பராமரிக்கும் பணியை ஒப்பந்தம் எடுக்கும் நிறுவனம் பார்த்துக் கொள்ளும். மாநகராட்சி நிர்வாகம் அதனை மேற்பார்வையிடும்.

கட்டணங்கள் நிர்ணயிக் கப்பட்ட பின், டிசம்பர் 1ம் தேதி முதல் செம்மொழிப் பூங்காவை பொதுமக்கள் பார்வையிடலாம். செம்மொ ழிப்பூங்கா பணிகள் தாமதமானால், தாமதம் என்று சொன்னவர்கள், வேகமாய் நடந்தால் அவசரமாய் நடப்பதாக சொல்கின்றனர். தற்போது அவசியம் வந்துவிட்டதால், செம்மொழிப் பூங்காவை திறக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆய்வின்போது, கோவை எம்.பி. கணபதி ராஜ்குமார், அரசு முதன்மைச் செயலர் (நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை) த.கார்த்தி கேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூத ன்ரெட்டி, மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்ளிட் டோர் பங்கேற்றனர்.

இதனிடையே தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'கோவை செம்மொழிப்பூங்கா தொடக்க விழாவைத் தொடர்ந்து நடைபெற உள்ள 'டிஎன்ரைஸ்' நிகழ்ச்சியில், முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில், பல்வேறு தொழில் நிறுவ னங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொ ள்ளப்பட உள்ளன' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்டாலின் மீண்டும் ஆட்சி அமைப்பார்: வைகோ நம்பிக்கை

**சென்னை, நவ.24–**

போதைப்பொருள் ஒழிப்பு, சாதி மோதல் தடுப்பு உள்ளிட்டவற்றை வலியுறுத்தி வரும் ஜன.2 முதல் 12ம்தேதி வரை தான் மேற்கொள்ள் இருக்கும் சமத்துவ நடை பயணத்துக்கு எழும்பூரில் உள்ள மதிமுக அலுவலகத்தில் சென்னை மண்டலத்தைச் சேர்ந்தநிர்வாகிகளை மதிமுக பொதுச்செயலாளர் வைகோ நேற்று தேர்வு செய்தார். அதனை தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: புகைப்பிடி ப்பவர்களுக்கு, மது அருந்துபவர்களுக்கு இந்த நடைபயணத்தில் அனுமதி இல்லை. மருத்துவ வசதிகளும் பயணத்தின் போது மருத்துவர்களும் உடன் வருவது போன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என் எஞ்சிய நாட்களை மக்களுக்காக வாழ விரும்புகிறேன். கஞ்சா போன்ற போதைப் பொருட்களை ஒழிக்க இந்த நடைபயணம் நடைபெறவுள்ளது.



கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் வைத்திருந்தால் குறைந்த பட்சம் 10 ஆண்டு சிறை, பயன்படுத்தினால் 7 ஆண்டு சிறை என்று சட்டத்தை புதிதாக கொண்டு வந்து அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். கல்லூரிகளிலே சாதி சங்கங்கள் வைத்துள்ளார்கள், மோதல் ஏற்படுகிறது, வீச்சரிவாள், பட்டா கத்தியோடு சண்டை போடுகிறார்கள். இதை தடுக்கத்தான் 'சமத்துவ நடைப்பயணம்' எனதலைப்பை வைத்துள்ளேன். ஜன.2ம்தேதி திருச்சி மார்க்கெட் அருகே முதல்வர் மு.க.ஸ்டாலின் நடைபயணத்தை தொடங்கி வைக்கிறார்.

காதர் மொய்தீன், செல்வப் பெருந்தகை, திருமா வளவன் உள்ளிட் டோர் வழி அனுப்ப உள்ளனர். மதுரையில் நடக்கும் நிறைவு நிகழ்வில் கவிஞர் வைரமுத்து, நடிகர் சத்யராஜ், திருமுருகன் காந்தி உள்ளிட்ட முக்கிய நபர்கள், கூட்டணி தலைவர்கள் வாழ்த்துகின்றனர்.

பொதுமக்கள் பெருமளவில் வெள்ளம் போல கூடும்போது அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நிகழ்ச்சியை நடத்தும் தலைவருக்குத் தான். பொறுப்பு, பாதுகாப்பு உணர்வோடு தலைவர் தான் இருக்க வேண்டும். பாதிப்பு ஏற்பட்டால் குற்ற உணர்ச்சியோடு இருக்க வேண்டும். இழவு வீட்டுக்கு துக்கம் கேட்டுப் போவதுஎன்றால் அவர்களின் வீட்டுக்குத் தான் செல்ல வேண்டும்;

ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு அவர்களை நம் வீட்டுக்கு வரவழைத்து கேட்கக் கூடாது. இவையெல்லாம் பொது வாழ்வில் படித்துக் கொள்ள வேண்டிய பாடங்கள்; அரிச்சுவடி. யாரையும் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இல்லை. விஜய்தன் கடமையை செய்யத் தவறி விட்டார். திமுக ஆட்சியில் செயல்படுத்தப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங் களை அனைத்து மாநில ங்களும் பின்பற்றி வருகின்றன. மக்களுக்கான எண்ணற்ற நலத்திட்டங்களை திமுக செய்துவருகிறது. நிச்சயம் மக்கள் புரிந்துகொள் வார்கள். வருகின்ற சட்டப் பேரவை தேர்தலிலும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் ஆட்சி அமைப் பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் என்பது இனி கட்டாயம்; பிரதமர் மோடி

ஜோகன்னஸ்பர்க்: நவ.24-

ஐ.நா.,வில் சீர்திருத்தங்கள் என்பது இனி கட்டாயம் என்று பிரதமர் மோடி வலியுறுத்தி உள்ளார்.

தென் ஆப்ரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் இந்தியா, பிரேசில், தென் ஆப்ரிக்கா தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

கூட்டத்தில் அவர் பேசியதாவது;

உலக நாடுகள் மத்தியில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பு என்பது தேவை. இங்கு பயங்கரவாதத்தை எதிர்த்து செயல்படுவதில் இரட்டை நிலைப்பாடு என்பதற்கு இடமே இல்லை.



இந்த கூட்டம் 3 நாடுகளின் குழுக்கள் கூட்டம் அல்ல. மாறாக, 3 பெரிய ஜனநாயக நாடுகள் மற்றும் 3 பெரிய பொருளாதாரங்களை இணைக்கும் ஒரு முக்கிய தளம். நம் ஒவ்வொருவரின் முன்னேற்றத்தை நாம் பாராட்டிக் கொள்ளலாம். இது வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக மாறும்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் என்பது இனிமேல் ஒரு விருப்பம் அல்ல, மாறாக அது கட்டாயம். கல்வி, சுகாதாரம், பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், சூரிய ஒளிசக்தி போன்ற துறைகளில் 40 நாடுகளின் திட்டங்களில் இந்தியா, பிரேசில், தென் ஆப்ரிக்கா நாடுகளின் பணி பாராட்டத்தக்கது.

இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

## ஐநா பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம் ஒரு கட்டாய தேவை: பிரதமர் மோடி

ஜொகன்னஸ்பர்க், நவ.24-

ஐநா பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம் என்பது இப்போது ஒரு கட்டாயத் தேவை என்றும் இதை, இந்தியா பிரேசில் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து வலியுறுத்த வேண்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

தென் ஆப்ரிக்காவின் ஜொகன்னஸ்பர்கில் ஜி 20 உச்சி மாநாடு நடைபெற்று வரும் நிலையில், அதன் இடையே இந்தியா பிரேசில் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற IBSA கூட்டம் நடைபெற்றது. தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா ட சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.



இக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, "இந்தக் கூட்டம் சரியான நேரத்தில் நடைபெறுகிறது. ஆப்பிரிக்க மண்ணில் நடைபெற்ற முதல் ஜி20 உச்சிமாநாட்டுடன் சேர்ந்து இது நடைபெறுகிறது. வளரும் நாடுகள் (உலகளாவிய தெற்கு நாடுகள்) தொடர்ச்சியாக நான்கு முறை ஜி20 தலைமைத்துவ பொறுப்பை வகித்து வருகின்றன. அதில் கடைசி மூன்று முறை ஐபிஎஸ்ஏ உறுப்பு நாடுகள் ஜி20 தலைமைத்துவத்தை ஏற்று நடத்தி உள்ளன. இதன் விளைவாக, மனிதநேய மேம்பாடு, பலதரப்பு சீர்திருத்தம், நிலையான வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல முக்கிய முயற்சிகள் உருவாகியுள்ளன.

ஐபிஎஸ்ஏ என்பது மூன்று நாடுகளின் குழு மட்டுமல்ல. மூன்று கண்டங்கள், மூன்று முக்கிய ஜனநாயக நாடுகள், மூன்று முக்கிய பொருளாதாரங்கள் ஆகியவற்றை இணைக்கும் ஒரு முக்கியமான தளம். உலகளாவிய நிர்வாக நிறுவனங்கள் 21ம் நூற்றாண்டின் யதார்த்த நிலைகளிலிருந்து வெகு தொலைவில் செயல்பட்டு வருகின்றன. உலக நிர்வாக நிறுவனங்களில், குறிப்பாக ஐநா பாதுகாப்பு கவுன் சிலில் சீர்திருத்தம் என்பது இப்போது ஒரு கட்டாயத் தேவை என்பதை ஐபிஎஸ்ஏ நாடுகள் இணைந்து வலியுறுத்த வேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்பில் நெருக்கமான ஒருங்கிணைப்பு அவசியம். பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும்போது இரட்டை நிலைப்பாட்டிற்கு இடமளிக்கக்கூடாது. மனித குலத்தை மையமாகக் கொண்ட வளர்ச்சியை உறுதி செய்வதில் தொழில்நுட்பத்தின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. யுபிஐ போன்ற டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, கோவின் போன்ற சுகாதார தளங்கள், சைபர் பாதுகாப்பு கட்டமைப்புகள், பெண்கள் தலைமையிலான தொழில்நுட்ப முயற்சிகள் ஆகியவற்றை மூன்று நாடுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்ளும் வகையில் 'ஐபிஎஸ்ஏ டிஜிட்டல் புதுமை கூட்டமைப்பு' என்ற அமைப்பை நிறுவலாம்.

பாதுகாப்பான, நம்பகமான, மனிதகுல நலனை மையமாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு விதிமுறைகளை வகுப்பதில் ஐபிஎஸ்ஏ வலுவான திறனை கொண்டுள்ளது. அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டிற்கு வருமாறு ஐபிஎஸ்ஏ தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

ஐபிஎஸ்ஏ அமைப்பில் ஒருவருக்கொருவர் வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்து நிலையான வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்க முடியும். சிறு தானியங்கள், இயற்கை வேளாண்மை, பேரிடர் மீள்தன்மை, பசுமை எரிசக்தி, பாரம்பரிய மருந்துகள், சுகாதாரப் பாதுகாப்பு போன்ற துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

கல்வி, சுகாதாரம், பெண் களுக்கு அதிகாரமளித்தல், சூரிய மின்சக்தி போன்ற துறைகளில், நாற்பது நாடுகளின் திட்டங்களை ஆதரிப்பதில் ஐபிஎஸ்ஏ நிதியத்தின் பணி பாராட்டுக்குரியது. வளரும் நாடுகளுக்கு (உலகளாவிய தெற்கு நாடுகள்) இடையே ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் பருவநிலை மீட்சித் தன்மையுடன் கூடிய வேளாண்மைக்கான ஐபிஎஸ்ஏ நிதியத்தை அமைக்கலாம்" என்று தெரி வித்தார்.

## "விஜய் ஒரு சின்ன குழந்தை; அவர் பேசுவதை பொருட்படுத்தக்கூடாது" ஜெகத்ரட்சகன்

**புதுச்சேரி, நவ.24–**

'விஜய் ஒரு சின்னக் குழந்தை, அவருக்கு சட்டம் தெரியவில்லை, அவர் சினிமாவில் பேசுவதுபோல் பேசுகிறார், அவர் பேசுவதை பொருட்படுத்தக்கூடாது' என திமுக எம்.பி. ஜெகத்ரட்சகன் தெரி வித்துள்ளார்.



புதுச்சேரியில் நான்காம் கட்ட திமுக உறுப்பினர் சேர்க்கை முகாம் இன்று தொடங்கியது. புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளில் 17 தொகுதிகளில் திமுக உறுப்பினர் சேர்க்கை மூன்று கட்டங்களாக தொடங்கப்பட்டது.

நான்காம் கட்டமாக இன்று மண்ணடிப்பட்டு தொகுதியில் உள்ள திருக்கனூர் கடைவீதியில் திமுக உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டது.

மாநில அமைப்பாளர் இரா. சிவா முன்னிலையில் நடைபெற்ற முகாமில், தி.மு.க கொள்கைப் பரப்புச் செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., கலந்து கொண்டு, வீடு, வீடாக சென்று திமுக உறுப்பினர் படிவம் கொடுத்து உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து ஜெகத்ரட்சகன் எம்பி செய்தியாளர்களிடம் கூறியதாவது, "தமிழகத்தை போல புதுச்சேரியையும் சிறந்த மாநிலமாக மாற்ற மக்கள் விரும்புகிறார்கள். தற்போது 21 தொகுதிகளில் தீவிர சேர்க்கை படிவத்தை தந்து உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்துள்ளோம். இந்த மாதத்துக்குள் இதர தொகுதிகளிலும் பணிகளை நிறைவேற்றுவோம்" என்றார்.

திட்டங்களுக்கு அனுமதி தராமல் மத்திய அரசு தமிழகத்தை புறக்கணிக்கிறதா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "வடநாடு, தென்நாடு என பிரிக்கிறார்கள். வெள்ளையனை வெளி யேற்ற பாடுபட்டோம். தொடர்ந்து புறக்கணிக் கப்படுகிறோம். புதுச் சேரியை ஆள அருகதை இங்குள் ளோருக்கு இல்லை. டெல்லியில் இருந்துதான ஆட்சி செய்கிறார்கள்.

புதுச்சேரியில் என்ன அதிகாரமுள்ளது. முதல்வர், எம்எல்ஏக்களுக்கு அதிகார மில்லை. அப்படிப்பட்ட ஜனநாயகமே தேவையில்லை. மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சியே எங்கள் தத்துவம். மக்கள் உணர்வு எங்களுக்குதான் தெரியும். வடநாட்டில் இருந்தோரை ஆட்சி செய்ய வைப்பது என்ன ஜனநாயகம்? புதுச்சேரியை புதுச்சேரியில் உள்ளோர் தான் ஆள வேண்டும் என்பதை திமுக முன்வைக் கிறது" என்றார்.

திமுகவுக்கு கொள்கை கிடையாது கொள்ளை யடிக்கதான் தெரியும் என விஜய் பேசியிருக்கிறாரே என்ற கேள்விக்கு, "பாவம் விஜய் ஒரு சின்ன குழந்தை. அவர் சொல்வதை பொருட்டாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சினிமாவில் பேசுவதுபோல் பேசுகிறார்" என தெரி வித்தார்.

நீட் தேர்வை ரத்து செய்வோம் என்று கூறிய திமுக, ஆட்சிக்கு வந்தபிறகு அதற்காக எதுவும் செய்யவில்லை என விஜய் சொல்கிறாரே என்ற கேள்விக்கு, "விஜய்க்கு சட்டம் தெரியவில்லை. இந்த விவகாரம் மத்திய அரசின் கையில் உள்ளது. நீதிமன்றம் சென்றுள்ளோம். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. நீட் தேர்வை ரத்து செய்வது திமுகவுக்கு உயிர்மூச்சான கொள்கை. அதில் இருந்து ஒரு விழுக்காடுகூட பின்வாங்காமல் செயல்படுகிறோம்" என தெரி வித்தார்.



# ஏஐ விஷயத்தில் இறுதி முடிவை மனிதர்களே எடுக்க வேண்டும்: ஜி 20 உச்சிமாநாட்டில் பிரதமர் மோடி உரை

ஜோகன்னஸ்பர்க், நவ.24-

செயற்கை நுண்ணறிவு மனித திறன்களை விரிவுபடுத்த வேண்டும் என்றும், இறுதி முடிவை மனிதர்களே எடுக்க வேண்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் நடைபெற்று வரும் ஜி 20 உச்சி மாநாட்டின் மூன்றாவது அமர்வில் 'அனைவருக்கும் நியாயமான, நிலையான எதிர் காலம்' என்ற தலைப்பில் பிரதமர் மோடி உரை யாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: முக்கியமான தொழில்நுட்பங்கள் ஊக்குவிக்கப்படும் விதத்தில் அடிப்படை மாற்றம் வேண்டும். அத்தகைய தொழில்நுட்ப பயன்பாடுகள் நிதியை மையமாக கொண்டு இல்லாமல் 'மனிதத்தை மையமாக கொண்டும், குறிப்பிட்ட நாட்டை மையமாகக் கொண்டு அல்லாமல் உலகளாவிய வகையிலும் இருக்க வேண்டும். இந்த தொலைநோக்குப் பார்வை இந்தியாவின் தொழில்நுட்பச் சூழல் அமைப்பில் ஒருங்கிணைக் கப்பட்டுள்ளது. விண்வெளி பயன்பாடுகள், டிஜிட்டல் பரிவர்த்தனை என அனைத் திலும் இந்தியா முன்னணியில் உள்ள நிலையில், உலக அளவில் குறிப்பிடத்தக்க நன்மைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய செயற்கை நுண்ணறிவு இயக்கத்தின் கீழ், செயற்கை நுண்ணறிவின் நன்மைகள் நாட்டில் உள்ள அனைவ ரையும் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கத்துடன் உயர் செயல்திறன் கொண்ட கணினி திறன், கட்டமைக்கப்பட்டு வருகிறது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உலகளாவிய பலன்களை கொடுக்கும் வகையில் மாற்றப்பட வேண்டும். வெளிப்படைத்தன்மை, மனித மேற்பார்வை, பாதுகாப்பு, தவறான பயன்பாட்டைத் தடுப்பது ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் உலகளாவிய புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்.

செயற்கை நுண்ணறிவானது மனித திறன்களை விரிவுபடுத்த வேண்டும். இறுதி முடிவை மனிதர்களே எடுக்க வேண்டும். 'அனைவரின் நலன், அனைவரின் மகிழ்ச்சி' என்ற கருப்பொருளில் 2026 பிப்ரவரியில் இந்தியா, செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டை நடத்தவுள்ளது. இந்த முயற்சியில் அனைத்து ஜி20 நாடுகளும் இணைய அழைக்கிறேன்.

செயற்கை நுண்ணறிவு யுகத்தில், 'இன்றைய வேலைகள்' என்பதிலிருந்து 'நாளைய திறன்கள்' என்ற வகையில் நமது அணுகுமுறையை விரைவாக மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது. புதுடெல்லி ஜி20 உச்சி மாநாட்டில் திறன் பரிமாற்றம் குறித்து பேசப்பட்டது. வரும் ஆண்டுகளில் திறன் பரிமாற்றம் குறித்த உலகளாவிய கட்டமைப்புக் குழுவை உருவாக்க வேண்டும். நிலையான வளர்ச்சி, நம்பகமான வர்த்தகம், அனைவருக்கும் செழிப்பு ஆகியவற்றுடன் உலகளாவிய நல்வாழ்வில் இந்தியா உறுதியுடன் உள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி உரையாற்றினார்.



# ஸ்டடி வேர்ல்ட் பொறியியல் கல்லூரியில் 'யுவ ஆடுகளம் விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா

கோவை, நவ.24-

கோவை மாவட்டம் மதுக்கரை பாலத்துறை பகுதியில் உள்ள ஸ்டடி வேர்ல்ட் பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கானயுவ ஆடுகளம் விளையாட்டுப் போட்டியின் 2025 பரிசளிப்பு விழா கல்லூரியின் தலைவர் டாக்டர் வித்யா வினோத் ஆலோசனைப்படி, கல்லூரியின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் பி. கோமதி, நிர்வாக அலுவலர் எம்.எம் மனோகரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விளையாட்டு விழாவில் கல்லூரி முதல்வர் டாக்டர் கே.கீதா முன்னிலை வகித்தார். யுவ ஆடுகளம் விளையாட்டு விழாவில் மண்டல அளவில் நடைபெற்ற போட்டிகளில் கோவை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 47 பள்ளிகளிலிருந்து 500 கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பல்வேறுவகையான விளையாட்டு போட்டிகள் மற்றும் கட்டுரைப் போட்டி,பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, பட்டிமன்றம் போன்ற இலக்கியப் போட்டிகளில் பெரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக விமானப்படை அதிகாரி (ஓய்வு) எம். மோகன் குமார் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் கோப்பைகளை வழங்கி விழாவை சிறப்பித்தார்.

இது குறித்து நிர்வாகம் சார்பாக தெரிவிக்கையில் இந்த யுவ ஆடுகளம் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவ மாணவியர்களுக்கு எந்த ஒரு பதிவு கட்டணமும் உணவு கட்டணமும் வாங்கப்படவில்லை மேலும் மாணவ மாணவர்களின் தங்கும் இட வசதிகளும் இலவசமாகவே நமது கல்லூரியின் சார்பாக ஏற்பாடு செய்திருந்தோம், விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற அனைத்து மாணவ மாணவர்களும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து பள்ளி நிர்வாகத்துக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவ மாணவியர்களுக்கும், வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கும் கல்லூரி சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்தனர்.

இதில் பங்கேற்ற பள்ளி ஆசிரியர்கள் கல்லூரி வழங்கிய வரவேற்பு, ஒழுங்கமைப்பு மற்றும் வசதிகளை பாராட்டினர்.

உற்சாகம் நிரம்பிய முறையில் வெற்றிகரமாக யுவ ஆடுகளம் விழா நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.





■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசு மருத்துவமனையில் உள்ள சித்த மருத்துவமனை பிரிவு சார்பில் இன்று (நவ23) மானாமதுரை குலாலர் தெருவில் உள்ள மண்பாண்ட தொழிலாளர்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கினார்கள். இந்நிகழ்வில் சித்த மருத்துவ பிரிவு மருத்துவர்கள், செவிலியர்கள் மண்பாண்ட தொழிலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்..





# பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் 100வது பிறந்தநாள் விழா

சிவகங்கை, நவ.24-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் பாபா மெட்ரிகுலேஷன் பள்ளி, பாபா கார்டன், பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் 100வது பிறந்தநாள் விழா பள்ளி வளாகத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் நிறுவனர் அம்மா B.இராஜேஸ்வரி முன்னிலையில் மாணவ மாணவிகள் ஆனந்தவல்லி அம்மன் கோவிலை சுற்றி நகர சங்கீர்த்தனம் பஜனை பாடி வந்தனர்.

பள்ளியின் நிர்வாகி மீனாட்சி குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஸ்வாமியின் வேடம் அணிந்து வந்த மாணவர்களுக்கு பள்ளியின் தாளாளர்

கபிலன் பரிசுகள் வழங்கி பாராட்டுக்கள் தெரிவித்தார். பள்ளி மாணவர்களிடம் உதவும் மனப்பான்மையை வளர்க்க , சுந்தர நடப்பு அருகில் உள்ள கருணாலயா இல்லத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு பள்ளியின் சார்பாக மதிய உணவு இனிப்புகள் மற்றும் ஆடைகள் மாணவர்கள் கைகளால் வழங்கப்பட்டது. ஸ்வாமியின் 1008 ஸகஸ்ர நாமாவளியை மலர் தூவி மாணவர்கள் வழிபட்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டு ஆரத்தியுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் பள்ளியின் முதல்வர் சாரதா செய்திருந்தார்.

# "ஓட்டு இல்லையென்றால் நிதி இல்லை" சர்ச்சை பேச்சு குறித்து அஜித் பவார் விளக்கம்

புதுடெல்லி, நவ.24-

எங்கள் வேட்பாளர்களை நீங்கள் நிராகரித்தால்



உங்களுக்கான நிதியை நான் நிராகரித்துவிடுவேன் என்று தேர்தல் பரப்புரையின் போது அஜித் பவார் பேசியது சர்ச்சையான நிலையில், தற்போது அதுகுறித்து அவர் விளக்கம் அளித்துள்ளார்.

மாலேகான் நகர் பஞ்சாயத்து தேர்தலுக்கான பரப்புரையின் போது பேசிய மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார், "18 தேசியவாத காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களையும் நீங்கள் தேர்ந்தெடுத்தால், நிதி பற்றாக்குறை ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்வேன்.

நான் வாக்குறுதியளித்ததை உங்களுக்கு வழங்குவேன் என உறுதியளிக்கிறேன். ஆனால் நீங்கள் அவர்களை நிராகரித்தால், நானும் உங்களை நிராகரிப்பேன். உங்களிடம் வாக்குகள் உள்ளன, என்னிடம் நிதி உள்ளது" என்று பேசினார்.

அஜித் பவாரின் இந்த பேச்சு கடும் சர்ச்சையை ஏற்படுத்தியது. எதிர்கட்சிகள் அவரது பேச்சுக்கு கடும் கண்டனம் தெரிவித்தன. அஜித் பவார் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தேர்தல் ஆணையத்துக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர். மேலும் அவர் மக்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோர வேண்டும் என்ற குரல்களும் எழுந்துள்ளன.

இந்த நிலையில் தன்னுடைய பேச்சு குறித்து விளக்கமளித்துள்ள அஜித் பவார், "சமீபத்தில், பிஹாரில் தேர்தல்கள் நடைபெற்றன. எதிர்க்கட்சிகள் அங்கு என்ன சொன்னார்கள்? 'எங்களுக்கு வாக்களியுங்கள், நாங்கள் உங்களுக்கு வேலைகளைத் தருவோம்' என்று அவர்கள் சொன்னார்கள், இல்லையா? தேர்தல்களின் போது, அனைவரும் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுவார்கள், ஆனால் இவை தேர்தல் நேரத்தில் மட்டுமே கூறப்படும் விஷயங்கள்" என்று தெரிவித்துள்ளார்.



# தாம்பரத்தில் 25 ஆயிரம் போலி வாக்குகள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாக மாவட்ட கழகச் செயலாளர் குற்றச்சாட்டு

சேலையூர், நவ.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் போலி வாக்காளர் குறித்து வெளியான தகவல் பொதுமக்களை அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட 65 ஆவது வார்டு பகுதியில் நடைபெற்று வரும் எஸ் ஐ ஆர் பணிகளை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர் தாம்பரத்தில் 25 ஆயிரம் போலி வாக்குகள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டினார்

தாம்பரம் சண்முகம் சாலையில் உள்ள வணிகவளாக கடைகளில் வாக்காளர்கள் வசிபது போல் காட்டி அங்கும் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர். இடிந்து போன ரயில்வே குடியிருப்பில் வாக்காளர்கள் வசிப்பதாக போலியாக பதிவு செய்து அங்கும் வாக்காளர்கள் போலியாக சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

இந்த எஸ் ஐ ஆர் பணிகள் மூலம் இந்த வாக்குகள் நீக்கப்படும் வாய்ப்பு கிடைத்திருப்பதாக கூறிய அவர் திமுகவை பொருத்தமட்டில் அவர்களின் டி என் ஏவில் போலி வாக்குகள் மூலம் வெற்றி பெறுவது தான் இலக்காக கொண்டிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். இதனை வாடிக்கையாக கொண்டிருந்த திமுக தற்போது போலி வாக்குகளை நீக்கும் எஸ் ஐ ஆர் பணிகளைக் கண்டு திணறி திக்குமுக்காடுவதாகவும் அவர் கூறினார்.

170 ஆவது பாகத்தில் 50 60 வாக்குகள் மட்டுமே உள்ள நிலையில் 250க்கும் மேற்பட்ட வாக்குகள் உள்ளாட்சி மன்ற தேர்தலில் பதிவாகி இருப்பதாக சுட்டிக்காட்டிய சிட்லபாக்கம் ராஜேந்திரன் இதுபோன்று போலி வாக்குகள் மூலம் வெற்றி பெற்ற திமுக எஸ் ஐ ஆர் பணிகளை கண்டு திணறுவதாக குற்றம் சாட்டினார்.

360 வாக்குகள் போலி வாக்குகள் என கூறும் நிலையில் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் 60 வாக்குகளை சேர்த்திருப்பதாக கூறும் நிலையில் மீதம் 300 வாக்குகள் போலியானவை என்பது உறுதிப்படக் கூடிய வகையில் ஆணையரின் பதில் இருந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்

இந்த அறுபது வாக்குகள் குறித்து முழு விவரங் களையும் அதிமுக தரப்பில் இருந்து கேட்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்

இந்நிகழ்வில் தாம்பரம் மாமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் சேலையூர் பகுதி கழகச் செயலாளர் சேலையூர் ஜி.சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்







# பம்மலில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு சேவை முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது

பம்மல், நவ.24-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மலில் 09/11/2025 அன்று பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் சார்பாக மாற்றுத்திறனாளிக ளுக்கான சிறப்பு சேவை முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் குறை தீர்க்கும் பெட்டி வைத்து மாற்றுத்திறனாளிகள் முதியோர், கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள், தந்தை அல்லது தாய் இழந்த குழந்தைகள் அவர்களுக்கு தேவையான உதவிகளை மனுவாக எழுதி குறை தீர்க்கும் பெட்டியில் போட்டனர். இந்நிக ழ்ச்சியை தொடர்ந்து பொது மக்கள் நலன் கருதி இலவச மருத்துவ மருத்துவ பரிசோதனை முகாம் மற்றும் பல் பரிசோதனை முகாம் நடைபெற்றது. மேலும் முகாமில் டாக்டர் நிவேதா ரவி அனகாபுத்தூர் நிவிஸ் பல் கிளினிக் சென்டர் அவர்கள் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்டின் இயக்குனர் பம்மல் பி.கவிதா, தலைவர் பம்மல் கலா, கௌரவத் தலைவர் அருணகிரி ஐயா, செயலாளர் எஸ்.தேவி, குரோம்பேட்டை கிளை செயலாளர் திருநாவுக்கரசு, கீரப்பாக்கம் கிளை துணை செயலாளர் சதீஷ் பாபு, வடசென்னை கிளைச் செயலாளர் சுமித்ரா நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## யாரெல்லாம் வெள்ளிக்கிழமையில் முருகனை வணங்கினால் வாழ்க்கையில் அற்புதம் நடக்கும் தெரியுமா?



முருகப் பெருமான், தன்னை நம்பிக்கையுடன் வேண்டும் பக்தர்களுக்கு உடனடியாக ஓடி வந்து, அருளை அள்ளி அள்ளிக் கொடுப்பார். இருந்தாலும் சில ராசிக்காரர்கள் முருகப் பெருமானை வெள்ளிக்கிழமை நாளில், சில குறிப்பிட்ட முறைகளில் வழிபட்டால் அவர்களின் வாழ்க்கையில் அற்புதமான மாற்றங்கள், நினைத்து பார்க்க முடியாத அதிசயங்கள் நடக்க வைப்பார் என்பது நம்பிக்கை.

பொதுவாக வெள்ளிக்கிழமை என்பது மங்களகரமான நாளாக கருதப்படுகிறது. இது கிரகங்களில் சுக்கிரனுக்கும், தெய்வங்களில் மகாலட்சுமிக்கும் உரிய நாளாக கருதப்படுகிறது. வெள்ளிக்கிழமையில் செல்வங்களுக்கு அதிபதியான மகாலட்சுமியை வழிபட்டால் செல்வம் சேரும், மங்களகரமான வாழ்க்கை அமையும் என்பது தான் பெரும்பாலானவர்களின் நம்பிக்கையாக உள்ளது. வெள்ளிக்கிழமை வழிபாடு சக்தி வாய்ந்ததாகும். ஆனால் வெள்ளிக்கிழமை என்பது அன்பும், அருளும் சேர்ந்த ஒரு சக்திகரமான நாளாகும்.

மகாலட்சுமிக்கு விளக்கேற்றுதல், விரதம் இருத்தல், கோ பூஜை செய்தல் போன்ற வழிபாடுகள் செல்வச் செழிப்புக்காகவும், மன நிம்மதிக்காகவும் செய்யப்படுகின்றன. அதே போல் வெள்ளிக்கிழமை ராகு கால நேரத்தில் துர்கைக்கு விளக்கு ஏற்றி வழிபட்டால் குடும்பத்தில் உள்ள கஷ்டங்கள் அனைத்தும் தீரும். குலதெய்வத்தை வழிபடவும் வெள்ளிக்கிழமை ஏற்ற நாளாக கருதப்படுகிறது. ஆனால் பலருக்கும் தெரியாத ஒரு விஷயம் என்னவென்றால், வெள்ளிக்கிழமையில் முருகப் பெருமானை வழிபட்டால் தெய்வீக அருள் கிடைப்பதுடன், வெற்றிகளும் குவியும். அதுவும் வெள்ளிக்கிழமையில் குறிப்பிட்ட நான்கு ராசிக்காரர்கள் முருகப் பெருமானை அவர்களின் ராசிக்குரிய வழிமுறையில் வழிபட்டால் வாழ்க்கையில் அற்புதங்கள் நடக்கும்.

வெள்ளிக்கிழமையில் முருகனை வழிபட வேண்டியவர்கள் :

1. மிதுனம் உங்களின் ராசி அதிபதியான புதனுடன் நட்பு கொண்டவர் முருகப் பெருமான். வெள்ளிக்கிழமையில் காலை வேளையில் முருகப் பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்து, "ஓம் சரவண பவ" மந்திரத்தை 108 சொல்லி வழிபட வேண்டும். இதனால் மன அழுத்தம் குறையும். புதிய வாய்ப்புகள், மகிழ்ச்சி, புதிய மாற்றங்கள் வரும்.

2. கன்னி கன்னி ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமையில் முருகனை வழிபட்டால் சந்தேக மனம், பயம், மனக்குழப்பம் ஆகியவை நீங்கும். வெள்ளிக்கிழமைகளில் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் இருந்து ஏதாவது ஒரு பாட்டை வாசித்தால் கூட மனம் லேசாகும். முருகப் பெருமானை மனதார நினைத்து திருப்புகழ் படிப்பதால் அடுத்த வாரமே கூட நல்ல செய்தி தேடி வரும்.

3. தனுசு தனுசு ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமையில் முருகனை வழிபட்டால் அவர்களின் வெற்றிக் கதவு திறக்கும். வெள்ளிக்கிழமையில் சிவப்பு நிற மலர் அல்லது சிவப்பு நிற வஸ்திரத்தை முருகனுக்கு சாற்றி வழிபட்டால் தடைகள் அகலும். கல்வி, போட்டி தேர்வுகள், வேலை வாய்ப்பு, வளர்ச்சி ஆகியவை அமோகமாக இருக்கும்.

4. மீனம் மீனம் ராசிக்காரர்கள் வெள்ளிக்கிழமை மாலை வேளையில் முருகனின் படத்திற்கு முன் விளக்கு ஏற்றி வைத்து, குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது சரவண பவ மந்திரத்தை சொல்லுவதால் மன அமைதி, ஆன்மீக சக்தி, குடும்ப ஒற்றுமை ஆகியவை ஏற்படும்.

வெள்ளிக்கிழமையில் திருப்பரங்குன்றம் அல்லது உங்களுக்கு பிரியமான ஊர் முருகன் அல்லது உங்கள் வீட்டின் அருகில் உள்ள முருகனை மனதார வழிபடுங்க. உங்கள் வாழ்க்கையில் பல நல்ல மாற்றங்கள், அற்புதங்கள் நடப்பதை காண முடியும். அதே போல் வெள்ளிக்கிழமையில் விளக்கேற்றி, சிவப்பு நிற மலர்களை முருகனுக்கு படைத்து, பால் நைவேத்தியமாக படைத்து, ஓம் சரவண பவ மந்திரம், கந்த சஷ்டி கவசம் ஆகியவற்றை நம்பிக்கையுடன் படித்து வந்தால் முருகனின் அருள் விரைவாகக் கிடைக்கும்.

## மிக உயரமான கோபுரங்களை உடைய தென்னிந்தியாவின் டாப் 20 கோவில்கள்



கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். கோவிலுக்குள் இருக்கும் தெய்வத்தை வழிபடுவதை விட பல மடங்கு புண்ணியத்தை தரக் கூடிய கோபுரங்களை தென்னிந்தியாவில் மிக அதிகம். அதிகமான கோபுரங்களை கொண்ட கோவில்கள் பல இருந்தாலும், உயரமான கோபுரங்களை கொண்ட பழமையான, புகழ்பெற்ற கோவில்கள் உள்ளன. இவற்றில் அதிக உயரமான கோபுரங்களை கொண்ட கோவில்கள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

இந்தியா, பல லட்சக்கணக்கான கோவில்களைக் கொண்ட ஆன்மிக பூமியாக திகழ்கிறது. இவற்றுள் பல கோவில்கள் புராதன கோவில்களாகவும், புண்ணிய தலங்கள், பல பிரம்மாண்ட கோவில்களாகவும் உள்ளன. பல ஆயிரம் ஆண்டுகள் பழமையிலும், பிரம்மாண்டத்திலும் அனைவரையும் ஆச்சர்யப்பட வைக்கும் கோவில்கள் தென்னிந்தியாவில் அதிகமாக உள்ளன. கோவில்களின் அடையாளமாக கருதப்படும் கோபுரங்களில் மிக உயரமான கோபுரங்களை கொண்ட கோவில்களும் தென்னிந்தியாவில் அதிகம். அப்படி தென்னிந்தியாவில் மிக உயரமான கோபுரங்களைக் கொண்ட டாப் 20 கோவில்களின் பட்டியலை தெரிந்து கொள்ளலாம்.

தென்னிந்தியாவில் 100 அடிக்கு அதிகமான உயரம் கொண்ட கோவில் கோபுரங்கள் ஏராளம் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மிகவும் புகழ்பெற்ற தலங்களாகவும், சிவன் கோவில்களும் உள்ளன. இதில் ஒரு சில வைணவ புகழ்பெற்ற மற்றும் திவ்ய தேசங்களான வைணவ தலங்களும் உள்ளன. கோவில் கோபுர உயரத்தில் மட்டுமின்றி பாவங்களை போக்கி, புண்ணியங்களை தரும் சிறப்புமிக்க முக்தி தலங்களாகவும் இவைகள் திகழ்கின்றன. வாழ்நாளில் ஒருமுறையாவது சென்று வழிபட வேண்டிய கோவில்களில் இவைகள் மிகவும் முக்கியமானவை.

தென்னிந்தியாவின் டாப் 20 உயரமான கோபுரங்களைக் கொண்ட கோவில்கள்:

1. ரங்கநாத சுவாமி கோவில், ஸ்ரீரங்கம் 239.5 அடி
2. முருதீஸ்வரர் கோவில், கர்நாடகா 237.5 அடி
3. அண்ணாமலையார் கோவில் கிழக்கு கோபுரம், திருவண்ணாமலை 216.5 அடி
4. தஞ்சை பெரிய கோவில், தஞ்சாவூர் 216 அடி
5. உலகளந்த பெருமாள் கோவில், திருக்கோவிலூர் 194 அடி
6. ஆண்டாள் கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் 193.5 அடி
7. ஏகாம்பரேஸ்வரர் கோவில், காஞ்சிபுரம் 190 அடி
8. கள்ளழகர் கோவில், மதுரை 187 அடி
9. காசி விஸ்வநாதர் கோவில், தென்காசி 180 அடி
10. சாரங்கபாணி கோவில், கும்பகோணம் 173 அடி
11. அண்ணாமலையார் கோவில் வடக்கு கோபுரம், திருவண்ணாமலை 171 அடி
12. மீனாட்சி அம்மன் கோவில், மதுரை 170 அடி
13. விருபாக்ஷா கோவில், ஹம்பி, கர்நாடகா 166 அடி
14. அண்ணாமலையார் கோவில் தெற்கு கோபுரம், திருவண்ணாமலை 157 அடி
15. ராஜகோபால சுவாமி கோவில், மன்னார்குடி 154 அடி
16. லட்சுமி நரசிம்மர் கோவில், மங்களகிரி, ஆந்திரா 153 அடி
17. ரங்கநாதசுவாமி கோவில் வெள்ளை கோபுரம், ஸ்ரீரங்கம் 145 அடி
18. சுந்தரராஜ பெருமாள் கோவில், உத்திரமேரூர் 144 அடி
19. அண்ணாமலையார் கோவில் வடக்கு கோபுரம், திருவண்ணாமலை 144 அடி
20. வரதராஜப் பெருமாள் கோவில், காஞ்சிபுரம் 130 அடி

## இந்த ஆண்டு சபரிமலை போறீங்களா?...இதெல்லாம் தெரிந்து கொள்ள மறந்துடாதீங்க



கார்த்திகை முதல் தேதி மாலை அணிந்து மண்டல விரதத்தை துவக்கவும், சபரிமலை யாத்திரை மேற்கொள்ளவும் ஐயப்ப பக்தர்கள் ஆர்வமுடன் காத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு சபரிமலை செல்ல திட்டமிட்டிருக்கும் பக்தர்கள் தங்களின் யாத்திரையை துவக்குவதற்கு முன் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய சில தகவல்களை இங்கே தெரிந்து கொள்ளலாம்.

2025ம் ஆண்டிற்கான சபரிமலை சீசன் விரைவில் துவங்க உள்ளது. இதனால் சபரிமலை ஐயப்ப பக்தர்கள் அனைவரும் மாலை அணிந்து, விரதத்தை துவக்க தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நீங்களும் சபரிமலை போக திட்டமிடிருந்தால் சில முக்கிய தகவல்களை கண்டிப்பாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

சபரிமலை செல்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை :

இந்த ஆண்டு மண்டலமகர விளக்கு பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவிலில் நவம்பர் 16ம் தேதி மாலை 5 மணிக்கு நடைதிறக்கப்பட்டு, சுவாமி ஐயப்பனுக்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட உள்ளது.

நவம்பர் 17ம் தேதி அதிகாலை 4 மணி முதல் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

இந்த ஆண்டு சபரிமலை ஐயப்பன் கோவில் மண்டல பூஜை நவம்பர் 17ம் தேதி துவங்கி, டிசம்பர் 27ம் தேதி வரை நடைபெற உள்ளது.

டிசம்பர் 27ம் தேதி மண்டல பூஜை, படி பூஜைக்கு பிறகு இரவு ஹரிவராசனம் பாடப்பட்டு, கோவில் நடை அடைக்கப்படும்.

மகரவிளக்கு மகோற்சவத்திற்காக மீண்டும் டிசம்பர் 30ம் தேதி அதிகாலை சபரிமலை ஐயப்பன் கோவில் நடைதிறக்கப்படும்.

2026ம் ஆண்டு ஜனவரி 14ம் தேதி மகரசங்கராந்தி நாளில் மகரவிளக்கு உற்சவம் நடைபெற உள்ளது.

2026ம் ஆண்டு ஜனவரி 20ம் தேதி சபரிமலை கோவில் நடை திறந்திருக்கும். பக்தர்கள் சாமி தரிசனம் செய்வதற்கு தொடர்ந்து அனுமதிக்கப்படுவார்கள்.

இந்த ஆண்டு சபரிமலை ஐயப்பனை தரிசனம் செய்வதற்கான விர்சுவல் க்யூவிற்கான ஆன்லைன் புக்கிங் நவம்பர் 01ம் தேதி துவங்கப்பட்டு, நவம்பர் 05ம் தேதி மாலையுடன் நிறைவடைந்து விட்டது.

சாமி தரிசனம், பூஜைகள், சன்னிதானத்தில் தங்குவதற்கான ஆன்லைன் புக்கிங் நவம்பர் 05ம் தேதி துவங்கி நடந்து வருகிறது.

இந்த ஆண்டு சபரிமலை செல்ல திட்டமிட்டிருப்பவர்கள் திருவிதாங்கூர் தேவசம் போர்டின் அதிகாரப்பூர்வ இணையதளத்திற்கு சென்று உங்களின் ஆதார் எண், மொபைல் நம்பர், பெயர் உள்ளிட்ட விபரங்களை அளித்து முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு ஆன்லைன் வழியாக முன்பதிவு செய்து வரும் பக்தர்கள் ஒரு நாளைக்கு 70,000 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட உள்ளனர்.

நேரடியாக சபரிமலைக்கு வந்து ஸ்பாட் புக்கிங் செய்து வரும் பக்தர்கள் ஒரு நாளைக்கு 20,000 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். ஸ்பாட் புக்கிங் செய்வதற்கான கவுன்ட்டர்கள் எரிமேலி, நிலக்கல், பம்பா, வண்டி பெரியாறு கெஸ்ட் ஹவுஸ் உள்ளிட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது.

சபரிமலை செல்லும் பக்தர்களின் வசதிக்காக தெற்கு ரயில்வே சார்பில் சிறப்பு ரயில்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

சபரிமலையில் இந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாத துவக்கத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், டிசம்பர் முதல் வாரத்திற்கு பிறகு மழை படிப்படியாக குறையும் என்றும் வானிலை ஆய்வு மைய கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த சமயத்தில் சபரிமலை செய்ய திட்டமிட்டிருக்கும் பக்தர்கள் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் செல்லும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மழை நிலவரத்தை கணக்கிட்டு பக்தர்கள் தங்களின் சபரிமலை யாத்திரையை திட்டமிட்டுக் கொள்ளலாம் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## பூஜையின் போது கடைசியில் சாமிக்கு கற்பூர ஆரத்தி காட்டுவது ஏன் தெரியுமா?



பூஜையின் போது மிக முக்கியமானதாக கருதப்படுவது கற்பூர ஆரத்தி ஆகும். இறை வழிபாட்டின் போது கற்பூரம் எதற்காக ஏற்படுகிறது, இதற்கு அப்படி என்ன சிறப்புகள், பூஜையின் இறுதியில் கற்பூரத்தால் ஆரத்தி காட்டி இறை வழிபாட்டினை நிறைவு செய்வதற்கு என்ன காரணம் என்பது பற்றி தெரிந்து கொள்ளலாம்.


கோயில்களிலும் வீடுகளிலும் பூஜை செய்யும் போது கற்பூர ஆரத்தி காட்டி பூஜையை நிறைவு செய்வது வழக்கமாக உள்ளது. இந்த செயலுக்கு பின்னால் உள்ள நன்மைகள் என்னென்ன என்பது பலருக்கும் தெரியாது. இதற்கு பல காரணங்களும், தாத்பரியங்களும் உள்ளதாக சொல்லப்படுகிறது. இவற்றை தெரிந்து கொண்டு இறைவனை வழிபடுவது முழுமையான பலன்களை தரும்.

உள் மனதில் இருக்கும் அறியாமை என்னும் இருள் நீங்கி வெளிச்சம் பரவட்டும் என்பதை இது மறைமுகமாக உணர்த்துகிறது என எடுத்துக் கொள்ளலாம். கற்பூரம் மிகவும் புனிதமான, மதிப்பிற்குரிய பொருளாகக் கருதப்படுகிறது. இதை நெருப்பு வைத்து எரியச் செய்யும் போது அது முழுவதுமாக எரிந்து, சாம்பல் போன்ற எதையும் மிச்சமாக வைப்பதில்லை. இது அதன் புனிதத்தின் வெளிப்பாடு எனலாம். கற்பூரம் எரிந்து நெருப்பாகவும் புகையாகவும் மாறிவிடுவது போல் பக்தர்கள் பக்தியில் கரைந்து, மனதிலும் இதயத்திலும் உள்ள எதிர்மறை எண்ணங்களையும், அசுத்தங்ளையும் நீக்கி புனிதமடைய வேண்டும். தூய, களங்கமற்ற, தெய்வீகமான உறவை கடவுளுடன் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையே கற்பூர ஆரத்தி பிரதிபலிக்கிறது.

நம் மனதில் உள்ள ஈகோ, சிற்றின்ப ஆசை மற்றும் உலகளாவிய பிணைப்புகள் போன்ற அத்தனை இச்சைகளும் கற்பூரம் கரைவது போல் கரைந்து நாம் ஒரு புதிய பிறவியாக உருமாற வேண்டுமென்று கற்பூரம் மறைமுகமாக உணர்த்துகிறது. சுயநலத்தோடு, பணம், பொருள், உடைமைகள் மற்றும் பொருள்சார் வசதிகள் நிறைந்த வாழ்வியலை பின்பற்றி வாழ்ந்து வரும் ஒருவர், அவை அனைத்தையும் துறந்து, வெளிச்சம் நிறைந்த ஞான மார்க்கத்தை நம்பிக்கையோடு கடைபிடிக்க வேண்டுமென்று கற்பூரம் நமக்கு போதிக்கிறது. பக்தர்கள் ஆன்மிக வளர்ச்சியும் தெளிவுற்ற மன நிலையும் பெற இந்த மாற்றம் அவசியம் எனவும் கற்பூர தீபம் உணர்த்துகிறது.

கற்பூர ஆர்த்தி காட்டும்போது வெளிவரும் கடுமையான, சுகந்த வாசனை அந்த இடத்தின் எதிர்மறை சக்திகளை வெளியேற்றவும், ஓர் அமைதியும் புனிதமும் நிறைந்த சூழலை அங்கு உருவாக்கவும் உதவுகிறது. இதன் மூலம் பக்தர்கள் கவனச் சிதறலின்றி, மனதையும் ஆன்மாவையும் ஒருங்கிணைத்து பிரார்த்தனை செய்ய முடிகிறது. மேலும், பக்தியின் அளவு அதிகரித்து தெய்வத்தின் அருளையும், உடல் வலிமையையும் உடனடியாகப் பெறவும் முடியும். இந்து மத சம்பிரதாயங்களில் கற்பூர ஆர்த்தி காட்டுவது மிக முக்கியமான ஒன்றாகும். கற்பூர ஒளி அதை ஏற்றுபவருக்கும் மற்றும் உலகத்தார் அனைவருக்கும் வாழ்வில் ஒளி கூட்டும். மேலும், ஆன்மாவிற்கு நம்பிக்கை அளித்து வழி காட்டவும் செய்யும். தெய்வீக சக்தியுடைய இறைவன், அவர் மீது நம்பிக்கை கொண்ட பக்தர்களின் உள் மனதில் வெளிச்சமாக உறைகின்றார். கற்பூர தீபத்தை காணும் ஒவ்வொருவருக்கும், அவர்களும் கற்பூரம் ஏற்றி, ஈகோ, பொறாமை, தற்பெருமை போன்ற மனதில் உள்ள கெட்ட எண்ணங்களை நீக்க வேண்டுமென அந்த தீபம் நினைவூட்டுகிறது. ஆரத்தி காட்டும் செயலில், கற்பூரம் ஓர் ஒருங்கிணைந்த பாகமாக இருந்து, ஆன்மிக வளர்ச்சிக்கு உள் மன சுத்தமும் அர்ப்பணிப்பும் அவசியம் என்பதை உணர்த்துகிறது. துறவியின் மனோபாவம் கொண்டு, பணிவுடனும், நம்பிக்கையோடும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் கற்பூரம் கற்றுத் தருகிறது.

## அதர்ஸ் திரைவிமர்சனம்



கிராண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க, அப் 7 வெஞ்சர்ஸ் ஆதிராஜ் புருஷோத்தமன் இணைந்து தயாரித்துள்ளார். அபின் ஹரிஹரன் இயக்கியுள்ள திரைப்படம் "அதர்ஸ்". ஆதித்யா மாதவன், கௌரி கிஷன், அஞ்சு குரியன், முனீஷ்காந்த், ஹரீஷ் பேரடி, மாளா பார்வதி, ஜகன், ஸி. சுந்தர்ராஜன் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகியிருக்கிறது.

விபத்துக்குள்ளாகும் ஒரு வேன்... அதில் மரணமடைந்த நால்வர் உடன் ஒரு திருடன். விசாரணைக்கு வரும் காவலர் மாதவன் (ஆதித்யா மாதவன்) ஒருபுறம் இந்த விபத்துக்கான உண்மையைத் தேடுகிறார். மறுபுறம், அவரது காதலி டாக்டர் மதுமிதா (கௌரி கிஷன்) செயற்கை கருத்தரிப்பு பிரிவில் நடக்கும் அதிர்ச்சியான மோசடிகளை வெளிச்சமிட முயல்கிறார். இவ்விரண்டு பாதைகளும் ஒரு புள்ளியில் சந்திக்கும் தருணமே படத்தின் திருப்பமும் திகைப்பூட்டும் கிளைமாக்ஸும்.

ஆதித்யா மாதவன் தனது கதாபாத்திரத்தை மிகுந்த செம்மையுடன் வடிவமைத்திருக்கிறார். உறுதியான போலீஸ் தோற்றத்தையும் இயல்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். கௌரி கிஷன், மருத்துவராக மட்டும் இல்லாமல், கதையிலும் முக்கியத்துவத்துடன் செயல்படுகிறார்.

முனீஷ்காந்த், ஜெகன், ஹரீஷ் பேரடி, மாளா பார்வதி போன்ற நடிகர்கள் தங்கள் ஒவ்வொரு காட்சியிலும் கதையின் விறுவிறுப்பை கூட்டியிருக்கிறார்கள். ஆனால், படத்தின் உண்மையான "கிளைமாக்ஸ் பலம்" வேதா கதாபாத்திரத்தில் நடித்த சுமேஷ் மூர்தான். "இந்திரா" படத்தில் சைக்கோ கேரக்டராக கவர்ந்தவர் ஒரு மாறுபட்ட வேடத்தில் அதிர்ச்சி அளிக்கிறார்.

இயக்குனர் அபின் ஹரிஹரன் எடுத்துக் கொண்ட தலைப்பு தைரியமானது. மருத்துவ துறையில் நடக்கும் சொல்லப்படாத ஒரு பிரச்சினையை திரைக்கதையாக்குவது எளிதல்ல. ஆனால், அவர் அதைக் கதையின் நாயகனின் விசாரணையுடன் இணைத்து வித்தியாசமான த்ரில்லராக வடிவமைத்திருக்கிறார். சில இடங்களில் "குற்றம் 23" அல்லது "வால்டர்" போன்ற படங்களின் தாக்கம் தோன்றினாலும், "அதர்ஸ்" தனது கதைமாந்திரத்தில் தனித்தன்மையைப் பாதுகாத்திருக்கிறது.

இரண்டாம் பாதி கதையை உண்மையில் புது வேகத்தில் இழுக்கிறது. குறிப்பாக மருத்துவமனையின் காட்சிகள், போலீஸ் விசாரணை இணையும் இடங்கள், சில தருணங்களில் "ஹாலிவுட் மெடிக்கல் த்ரில்லர்" உணர்வைத் தருகின்றன. ஆனால், முதல் பாதியில் அதே ரிதம் இருந்திருந்தால் படம் இன்னும் தாக்கம் ஊட்டியிருக்கும். ஜிப்ரானின் பின்னணி இசை படத்துக்கு உயிர் ஊட்டுகிறது. ஒவ்வொரு காட்சியிலும் மன அழுத்தத்தையும், மர்மத்தையும் இசையால் உணர்த்தியிருக்கிறார். அரவிந்த் சிங்கின் ஒளிப்பதிவு சிறப்பு. இரவுக் காட்சிகளில் தெரு விளக்குகளின் இயல்பான ஒளியை நுட்பமாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

மொத்தத்தில், "அதர்ஸ்" ஒரு மருத்துவ குற்றப்பின்னணியில் உருவான புதிய முயற்சி. மனித நேயம், சமூக சிந்தனை, விசாரணை த்ரில்லர் ஷை மூன்றையும் இணைத்து புதிய கோணத்தில் சொல்லியிருக்கிறது.

## மீண்டும் 'கும்கி' கவனம் ஈர்க்கும் அம்சம் என்ன?

ஒரு கதைக் களம் ரசிகர்களைக் கவர்ந்துவிட்டால், அதே களத்தில், அதேபோன்ற கதாபாத்திரங்களைக் கொண்டு, ஆனால், வேறுவேறு கதைகளைப் படமாக்கும் போக்கு தென்னிந்திய வணிக சினிமாவுக்கு ஊக்கமூட்டியிருக்கிறது.

அப்படித்தான் பிரபு சாலமன் இயக்கத்தில் உருவாகியிருக்கும் 'கும்கி 2' திரைக்கு வருகிறது. இதிலும் ஒரு வெள்ளந்தி இளைஞனுக்கும் அவனுடைய யானைக்கும் இடையிலான அன்பு, அதைப் பங்குபோட வரும் ஒரு பெண், இந்த முக்கோணப் பிணைப்பைத் தகர்க்க வரும் வில்லன் என உருவாகியிருக்கிறது என்கிறார் படத்தை எழுதி இயக்கியிருக்கும் பிரபு சாலமன்.

'பைசன்' பட வெற்றியால் வெளிச்சம் பெற்றிருக்கும் நிவாஸ் கே. பிரசன்னாவின் இசை. இயற்கையை அள்ளிக்கொண்டுவரும் எம்.சுகுமாரின் ஒளிப்பதிவு எனக் கவனம் பெற்றுள்ள இப்படத்தில், மதி என்பவர் அறிமுக நாயகனாக நடித்திருக்கிறார். படத்தில் அவருக்கு இணை ஸ்ரீதா. ஜெயந்திலால் காடா, தவல் காடா இணைந்து படத்தைத் தயாரித்திருக்கிறார்கள்.






## ரெட் லேபிள்: சிம்ரன் தந்த உற்சாகம்

பொது நிகழ்ச்சி என்கிற ஏரியாவில் சிம்ரனைக் காண முடியாது. அப்படிப்பட்டவர், 'ரெட் லேபிள்' என்கிற புதிய படத்தின் கதையும் உருவாக்கமும் பிடித்துப்போய் அதன் முதல் தோற்றத்தை வெளியிட்டிருக்கிறார்.

பொன்.பார்த்திபன் கதை, திரைக்கதையில், கே.ஆர்.வினோத் இயக்கியிருக்கும் இப்படத்தின் மூலம் நாயகனாகவும் தயாரிப்பாளராகவும் அறிமுகமாகிறார் லெனின். நாயகியாக அஸ்மின் நடித்திருக்கிறார். இவர்களுடன் ஆர்.வி.உதயகுமார், முனிஷ் காந்த் நடித் துள்ளனர்.

படம் குறித்து இயக்குநரிடம் கேட்டபோது: "'ரெட் லேபிள்' என்கிற பெயரைக் கேட்டதுமே டீத்தூள், மது வகை ஆகியவற்றின் வணிகப் பெயர் பலரது நினைவுக்கு வரலாம். ஆனால், அவை இரண்டுமே அல்ல. ரெட் என்பது புரட்சியையும் லேபிள் என்பது அடையாளத்தையும் குறிக்கும். ஒரு கொலையால், இழந்த அடையாளத்தை மீட்கப் போராடும் சில மனிதர்களின் கதை இது. கோவைதான் கதைக் களம்" என்றார்.




# 2026 சட்டமன்ற தேர்தலுக்கான அஇஅதிமுக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்



இளையான்குடி, நவ.24-
சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்ற தொகுதி இளையான்குடி அஇஅதிமுக கட்சியின் சார்பில் பாகம் முகவர்கள் மற்றும் பூத் கிளை செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் சிவகங்கை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் PR.செந்தில்நாதன் ஆலோசனையின் படி இளையான்குடி அஇஅதிமுக செயலாளர் M.A.நாகூர் மீரா தலைமையில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு இணைச் செயலாளர் விருதுநகர் மாவட்டம் (மேற்கு) P.M.பாலபாலாஜி முன்னிலையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் வி.குமரேசன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் S.செல்வராஜ், மாவட்ட சிறுபாண்மை பிரிவு இணைச் செயலாளர் O.M.மௌலானா செய்யது, அவைத்தலைவர் V.S.H. அபுபக்கர், மாவட்ட சிறுபாண்மை பிரிவு துணை செயலாளர் M.செய்யது அன்சாரி, பேரூர் அம்மா பேரவை செயலாளர் H.செய்யது இபுறாகிம், பேரூர் எம்.ஜி. ஆர் மன்ற செயலாளர் S.தாவூது பாட்சா, பேரூர் கழக துணை செயலாளர் எம்.திருநாவுக்கரசு, மாவட்ட அண்ணா தொழிற் சங்க துணை செயலாளர் V.ஆனந்தராஜ், வார்டு செயலார்கள் R. சிவக் குமார், தெய்வேந்திரன், M.முகம்மது மைதீன், K.M.அலிஅக்பர், இஸ்மத் இனூன், M.செல்வக்குமார், K.M. ரபி முகம்மது, அரசேந்திரன், M.செல்வம், K.M.கலில் அஹமது, A.ரியாசுர் ரஹ்மான், கோஸ் அப்துல்காதர், கீழாயூர் செய்யது இபுறாகிம், கதிரேசன், முனீஸ்வரி, தனராஜ், கிளி, சங்கன், செய்யது அன்சாரலி, ராஜ் குமார், யாசர் அலி அரபாத், S.சபீர் அகமது, வி.ஜாகிர் உசேன், முகம்மது அஸ்லம், நாகநாதன், வி.காளிதாஸ், கி.செய்யது அலாவுதீன், A.சௌகத் அலி, ஹாத்திம், செய்யது அப்தாகிர், M.பானுப்பிரியா, பிரபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.1,600 கோடியில் நிறைவேற்றப்பட்ட முல்லை பெரியாறு குடிநீர் திட்டம் டிச.7ல் தொடக்கம்



மதுரை, நவ.24-
மதுரை மாநகராட்சியின் முல்லை பெரியாறு குடிநீர் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் டிசம்பர் 7ல் தொடங்கி வைக்கிறார்.

மதுரை மாநகராட்சியில் உள்ள 100 வார்டுகளில் சுமார் 20 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். சுமார் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகளைக் கொண்ட மதுரை மாநகரின் இன்றைய ஒருநாள் குடிநீர்த் தேவை 268 மில்லியன் லிட்டர். ஆனால், மாநகராட்சிக்கு வைகை அணையிலிருந்து தினமும் 115 மில்லியன் லிட்டர், வைகை ஆற்றுப்படுகையிலிருந்து 47 மில்லியன் லிட்டர், காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் 30 மில்லியன் லிட்டர் ஆக மொத்தம் 192 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டுகிறது.

அதனால், நாளொன்றுக்கு 7 கோடி லிட்டர் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு வந்தது. வைகை அணை நீர்மட்டம் குறைந்தால் கடந்த காலத்தில் மதுரை மாநகராட்சியில் குடிநீர் பற்றாக்குறையால், அன்றாட தேவைக்கும் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி வந்தனர். கடந்த 2018ம் ஆண்டு மதுரையின் குடிநீர் தேவையை மதிப்பீடு செய்த மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பு 2034ல் நகரின் தினசரி 317 மில்லியன் லிட்டர் குடிநீரும், 2049ல் நகரின் தினசரி 374 மில்லியன் லிட்டர் குடிநீரும் தேவைப்படும் எனக் கூறியிருந்தது.

அதன் அடிப்படையில் கடந்த அதிமுக ஆட்சியில், மதுரை மாநகராட்சியின் குடிநீர் பற்றாக்குறையை போக்க, முல்லைப் பெரியாறு லோயர் கேம்ப்பிலிருந்து நேரடியாக மதுரை நகருக்கு கூடுதலாக 125 மில்லியன் லிட்டர் குடிநீர் கொண்டு வருவதற்கான கூட்டுக்குடிநீர் திட்டம் தொடங்கப்பட்டது. தாமதத்தால் திட்டமதிப்பீடு 1,609.69 கோடியாக உயர்ந்துள்ளது. இடையில் சில காலம் முடங்கி கிடந்த இந்த திட்டம், சமீபகாலமாக வேகமெடுத்து நிறைவுபெறுவதற்கு மாநகராட்சி ஆணையர் சித்ரா முக்கிய காரணம். அவர் ஆணையராக பொறுப்பேற்ற பிறகு அடிக்கடி லோயர் கேம்ப், பண்ணைப்பட்டி ஆய்வுக்குச் சென்றும், அன்றாடம் இந்த திட்டப்பணி விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டு, விரைவுபடுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்.

வெற்றிகரமாக இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில், நிறைவுபெற்ற வார்டுகளில் தினமும் அல்லது 2 நாளைக்கு ஒரு முறை சுகாதாரமான குடிநீரை மாநகராட்சி வழங்கி வருகிறது. டிசம்பர் 7ம் தேதி மதுரை வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், உத்தங்குடியில் நடக்கும் அரசு விழாவில் இந்த திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து மாநகராட்சி உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, ''பணிகள் நிறைவுபெற்ற 85 வார்டுகளுக்கு தற்போது தினமும் அல்லது 2 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது'' என்றார்.

இரவு பகலாக பணிபுரிந்த மாநகராட்சி ஊழியர்கள்: கடந்த நான்கரை ஆண்டுகளாக மாநகராட்சி அதிகாரிகளும், ஊழியர்களும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இந்த திட்டப்பணியை மேற்கொண்டனர். இதில் உடல் நலம் பாதிக்கப்பட்ட சிலர் சிகிச்சையில் உள்ளனர். மாநகர் பகுதியில் ஒரே நேரத்தில் பாதாளசாக்கடை, குடிநீர், புதிய சாலைப்பணிகள் நடந்ததால், ஒவ்வொரு சாலைகளிலும் காவல் துறை, நெடுஞ்சாலைத் துறையிடம் அனுமதி பெற்று குழிகளை தோண்டி குழாய்களை பதிக்க அதிகாரிகளும், ஊழியர்களும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டனர்.

குடியிருப்பு பகுதிகளில் குழிகளை தோண்டும்போது மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஒருபுறம் எதிர்ப்பு தெரிவிக்க, அனைத்து எதிர்ப்புகளையும் கடந்து அதிகாரிகள் ஒருவழியாக இந்த திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர்.





# திருப்பத்தூரில் அறிவியல் கண்காட்சி கொண்டாட்டம்



சிவகங்கை, நவ.24-
சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் கிறிஸ்து ராஜா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களின் அறிவியல் அறிவுத் திறனை உற்சாகப்படுத்தும் நோக்கத்தில் அறிவியல் கண்காட்சி கொண்டாட்டம் நடைபெற்றது. பள்ளியின் நிறுவனர் விக்டர் தலைமை வகித்தார். பள்ளியின் தாளாளர் ரூபன் செயலாளர் விஜயா முன்னிலை வகித்தனர். பள்ளியின் முதல்வர் தவசம் கரீம் அனைவரையும் வரவேற்று பேசினார். காளையார் கோவில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதுநிலை விரிவுரையாளர் முனைவர் சேவற் கொடியோன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி அறிவியல் கண்காட்சியை தொடங்கி வைத்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்கள் அறிவியல் அறிவை வளர்த்துக் கொள்வதை விட அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண் டியதன் முக்கியத்துவம் பற்றியும் அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளும் முறை பற்றியும் மாணவர் களின் ஆர்வத்தை தூண்டும் வண்ணம் கேள்விகள் கேட்டு பரிசளித்தும் உரையாற்றினார். மாவட்ட அளவில் நடைபெற்ற குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் மண்டல அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்துராஜா பள்ளி மாணவர்கள் அப்சல் பரணிதரன் அவர்களை வழிநடத்திய ஆசிரியைகள் அபர்ணா எழிலரசி கௌரவிக்கப்பட்டனர். மாணவ மாணவிகளின் 250 க்கும் மேற்பட்ட அறிவியல் படைப்புகளை சிறப்பு விருந்தினர்கள் பார்வையிட்டு வெகுவாக பாராட்டி ஆலோசனைகள் வழங்கினார்கள். மாணவி அல்பினா நன்றி கூறினார். 500க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் பொதுமக்கள் பிற பள்ளி மாணவர்கள் அறிவியல் கண்காட்சியின் படைப்புகளை பார்வையிட்டு மகிழ்ந்தனர். அறிவியல் கண்காட்சியில் சிறப்பாக காட்சிப்படுத்துவதற்கு வழிகாட்டிய ஆசிரிய ஆசிரியைகள் பாராட்டப் பட்டனர்.

## 2024 தேர்தலில் இண்டியா கூட்டணி வென்ற தொகுதிகளில் 50 ஆயிரம் வாக்காளர்களை நீக்க திட்டம்: அகிலேஷ் குற்றச்சாட்டு



லக்னோ, நவ.24-
உத்தரபிரதேச முன்னாள் முதல்வரும், சமாஜ்வாதி கட்சித் தலைவருமான அகிலேஷ் யாதவ் லக்னோவில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

நாடு முழுவதும் உ.பி. உள்ளிட்ட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் (எஸ்ஐஆர்) நடைபெற்று வருகிறது. இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். கடந்த 2022 உ.பி. சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜக 255 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால், 2024 மக்களவைத் தேர்தலில் அந்தக் கட்சியால் 162 பேரவைத் தொகுதிகளில் மட்டுமே முன்னிலை பெற முடிந்தது.

அதே நேரத்தில் 2022 தேர்தலில் 111 இடங்களில் சமாஜ்வாதி கட்சி வெற்றி பெற்றது. 2024 மக்களவைத் தேர்தலில் எங்கள் கட்சி 183 இடங்களில் அதிகப்படியான வாக்குகளைப் பெற முடிந்தது.

2022ம் ஆண்டு தேர்தலில் 2 இடங்களில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி, மக்களவைத் தேர்தலில் 40 பேரவைத் தொகுதிகளில் அதிக வாக்குகளைப் பெற முடிந்தது. இதன்மூலம் இந்த எஸ்ஐஆர் பணிகளைக் கொண்டு சதித்திட்டத்தை பாஜக செயலாற்ற முனைகிறது.

கடந்த தேர்தலில் காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சிகள் வெற்றி பெற்ற அல்லது முன்னிலையில் இருந்த தொகுதிகளில் இருந்து தலா 50 ஆயிரம் வாக்குகளை நீக்க பாஜகவும், தேர்தல் ஆணையமும் திட்டமிடுகின்றன. எனவே, நமது கட்சி நிர்வாகிகள் விழிப்புடன் பணியாற்றி நமது வாக்காளர்கள் பெயர்களை விடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்தவித முறைகேடுக்கும் நாம் இடம் கொடுக்கக்கூடாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



## இளையான்குடியில் திமுக பாகமுகவர்கள் கூட்டம்



இளையான்குடி, நவ.24-
சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய பேரூர் திமுக BLA மற்றும் BDA பாகமுகவர்கள் கூட்டம் மானாமதுரை தொகுதி பார்வையாளர் K.R.N போஸ் தலைமையில் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் பேரூர் செயலாளர் PA.நஜுமுதீன் முன்னிலையில் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க முன்னாள் தலைவர் சுப தமிழரசன், பேரூராட்சி துணை தலைவர் டி கே இப்ராஹிம் மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன் மாவட்ட பிரதிநிதிகள் உதயசூரியன், சாரதி ஒன்றிய நிர்வாகிகள் சிவனேசன், ராஜேந்திரன், முருகேசன் பாலாஜி, சக்தியேந்திரன் பேரூர் நிர்வாகிகள் ஜெயினுலாபுதீன், கம்பன் காதர், ரவூப் மணிமொழியின் உள்ளிட்ட நிர்வாகிகள் BLA மற்றும் BDA நிர்வாகிகள் கலந்து கொன்டனர்.

# கொடைக்கானல் மலைப்பகுதிகளில் தலையை மீறி கல் உடைப்பு மற்றும் கனிம வளத்தை சேதப்படுத்தினால் உடனடி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்: திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் உத்தரவு



திண்டுக்கல், நவ.24-
திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள மலைப்பகுதியில் தற்போது மேல்மலை மற்றும் கொடைக்கானல் நகரங்களில் உள்ள பகுதிகளில் தடை மீறி வெடி மருந்துகள் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு பாறைகளை உடைத்து பெரும் அளவில் கனிம வளத்தை சேதப்படுத்தி வருகின்றனர் மேலும் பொக்லைன் கம்ப்ரஸர் ஜேசிபி இயந்திரங்களைக் கொண்டு கனிம வளங்களை சேதப்படுத்துவது ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கனிம வளங்களை எடுத்துச் சென்று விற்பனை செய்கின்றனர் மேலும் கனிம வளமான மண்வளங்களையும் எடுத்துச் செல்கின்றனர் இது குறித்து மாவட்ட ஆட்சியருக்கு புகார் வந்த வண்ணம் உள்ள நிலையில் தற்போது கொடைக்கானல் பள்ளங்கி கோம்பை பகுதியில் உள்ள தனியார் தோட்டத்தில் ராட்சத இயந்திரங்களை கொண்டு பாறைகளை உடைத்து வருவதாகவும் இதனால் தங்களுக்கு பள்ளங்கி கோம்பை சாலை பிளவு ஏற்பட்டுள்ளதாக சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கு வசித்து வருவதாகவும் சாலை துண்டித்தாள் எங்களுக்கு வாழ்வாதாரம் இருக்காது மேலும் குடிநீருக்கு வரும் குழாய்களை வெடிவைத்து உழைத்து வருவதாகவும் தண்ணீரில் மிகவும் அசுத்தமாக வருவதாகவும் ஊர் பொதுமக்கள் மூலம் மாவட்ட ஆட்சியருக்கு புகார் பறந்தது இந்நிலையில் கொடைக்கானல் கோட்டாட்சியர் மூலம் ஆய்வு மேற்கொண்டு தனியார் தோட்ட உரிமையாளருக்கு ரூபாய் 50,000 அபராதம் விதிக்கப்பட்டு பொக்லைன் இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டது மேலும் கொடைக்கானலில் உள்ள சீனிவாசபுரம், கார்மேல் புறம், செண்பகனூர், தைக் கால், பூம்பாறை, கவுஞ்சி, மன்னவனூர், பாம்பார்புரம் போன்ற பகுதிகளில் ராச்சத இயந்திரங்களை கொண்டு கனிம வளங்களை சேதப்படுத்தியும் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருவது தொடர் புகார் வந்த வண்ணம் உள்ளது மேலும் இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு சட்டவிரோத கும்பலை கண்டறிந்து அவர்கள் மீது காவல்துறை மூலம் நடவடிக்கை எடுத்து வழக்குப்பதிவு செய்யப்படும் எனவும் மாவட்ட ஆட்சியர் சரவணன் கூறினார். மேலும் தடை செய்யப்பட்ட வாகனங்களை செய்தியாளர்கள் நேரில் சென்று படம் பிடித்து செய்தி சேகரிக்கும் முன்பு மாபியா கும்பல்கள் அவர்களை தாக்கியும் படம் பிடிக்கும் கேமராக்களை உடைத்தும் வருகின்றனர் இது குறித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியருக்கு புகார் வந்த வண்ணம் உள்ளது இதனை மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து பத்திரிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என பத்திரிக்கையாளர்கள் கூட்டமைப்பு புகார் கொடுத்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161